HINDUSTHAN EDUCATIONAL AND CHARITABLE TRUST

# HINDUSTHAN COLLEGE OF ENGINEERING AND TECHNOLOGY

Otthakkalmandapam(po),Coimbatore-641032

# REPOART

EVALUATE,ESTIMATE,EDUCATE




# MCA-2016

# DRAWINGS









**HARIHARAN G**
**III-MCA**

# உணர்வுகள்

தென்றல் காற்றுக்கு வியர்த்தால்.....
தண்ணீருக்குள் தாகம் எடுத்தால்.....
நெருப்புக்கு அனல் அடித்தல்.....
பனிக்கு குளிர் எடுத்தால்.....
யாருக்கும் தெரியாது.....!
ஒருவருக்கும் புரியாது.....!
இது தான் மனநலம் குன்றிய
குழந்தையின் உணர்வுகள்.....!





**NITHYASREE M**
**III-MCA**

தாய்மை



வலியில் துடிக்கும் குழந்தையை

பரிவுடன் பார்ப்பது பெண்மை!

அதே குழந்தையின் முகத்தில்

தன் குழந்தையைப் பார்ப்பது தாய்மை ! ....

கருவறைக்கு மதிப்புத்

தருபவன்

கல்லறை வரையில்

போற்றப்படுகிறான்...



MANi KANDAN R
II-MCA

## மனிதன்

தாலாட்டுப் பாடுபவள் தாய்

தட்டிக் கொடுப்பவன் தந்தை

தோள் கொடுப்பவன் தோழன்

தோள் சாய்பவள் தோழி

அக்கறை செலுத்துபவள் அக்கா

அன்பு செலுத்துபவன் அண்ணன்

## ஆசிரியர்கள்

பெற்று எடுத்த தாய் கூட கடைசி

காலங்களில் பயனை எதிர் பார்க்கிறாள்

ஆனால்,

தத்து எடுத்த தாயான ஆசிரியர்கள்

மட்டுமே எந்த பயனையும் எதிர்பார்ப்பது இல்லை!!!

சிதறிக்கிடந்த முத்துக்களை எடுத்து

மாலையாய் கோர்த்து எடுத்து போல

பிரிந்து இருந்த எங்களை

மாணவர்களயாய் மாற்றிய உங்களுக்கு நன்றி பல ......



SAKTHIVEL E
III-MCA

# நட்பு

முட்களைச் சுமக்கின்ற செடிதான்
மலரையும் சுமக்கிறது....!
சூரியனைச் சுமக்கின்ற வான்
தான் நிலவையும் சுமக்கின்றது....!
இருளைச் சுமக்கின்ற பூமிதான்
வெளிச்சத்தையும் சுமக்கின்றது....!
கண்ணீரைச் சுமக்கின்ற கண்கள்
தான் கனவுகளையும் சுமக்கின்றது....!
ஆனால்
வரவொன்றைத் தாங்கும்
இதயம்.....
பிறிவொன்றைத் தாங்குவதில்லையே......
ஏன்.........?
காரணம் இல்லாமல் கலைந்து போக
இது கனவும் அல்ல !
காரணம் சொல்லி பிரிந்து போக
இது காதலும் அல்ல
உயிர் உள்ளவரை தொடரும்
உண்மையான நட்பு.





**MANI KANDAN R**
**II-MCA**

# INTERESTING FACTS



- India never invaded any country in her last 100000 years of history.
- When many cultures were only nomadic forest dwellers over 5000 years ago, Indians established Harappan culture in Sindhu Valley (Indus Valley Civilization)
- The name 'India' is derived from the River Indus, the valleys around which were the home of the early settlers.
- The Persian invaders converted it into Hindu. The name 'Hindustan' combines Sindhu and Hindu and thus refers to the land of the Hindus.
- Chess was invented in India.
- Algebra, Trigonometry and Calculus are studies, which originated in India.
- The 'Place Value System' and the 'Decimal System' were developed in India in 100 B.C.
- The world's highest cricket ground is in Chail, Himachal Pradesh. Built in 1893 after leveling a hilltop, this cricket pitch is 2444 meters above sea level.
- India has the largest number of Post Offices in the world.
- The largest employer in India is the Indian Railways, employing over a million people.
- The world's first university was established in Takshila in 700 BC. More than 10,500 students from all over the world studied more than 60 subjects.
- Ayurveda is the earliest school of medicine known to mankind. The Father of Medicine, Charaka, consolidated Ayurveda 2500 years ago.



PRAKASH T
III-MCA



# என் காதலே

என் காதல் என் காதல் உன் பக்கம் சென்று போனது

என் இதயம் என் இதயம் உன்னோடு கலந்து நின்றது

என் உயிரே என் உயிரே அடி நீதான் என் உயிரே

என் வாழ்க்கையும் நீதான் என் மூச்சும் நீதான்

அடி எனக்கு எல்லாமே நீதான் ......



DEEPAK KUMAR S
III-MCA





DIVYA BHARATHI M
III-MCA

## எந்நாளோ ......?

உயிரற்ற கற்களுக்கு
உயிரை பணயம் வைத்து
நேர்த்தி கடன் தீர்க்கும்
மானிட உலகில்
உயிர் தந்த உள்ளங்கள் உருகும்
முதியோர் இல்லங்களின்
தாழ் அடைபடும்
அந்நாள்
எந்நாளோ ......?

சன்னதி முதல்
தெருவீதி தழுவி
கடைவீதி தொடர்ந்து
ஓங்கிய பிச்சைக் குரல்
ஒடுங்கும்
நாள்தான்
எந்நாளோ ......?

9

அந்நிய நாடுகளின்

ஆணவம் அடங்கும்

சக்திகள் நிறைந்த

சரித்திரம் கண்ட

கண்டுபிடிப்புகள்

நம்மில் நிற்க

கையாளும் மனம்கூடும்

பெருநாளும்

எந்நாளோ ......?



DEEPIKA.N
III-MCA

## தனிமை

தனிமையில்
நான் உன்னை
நினைக்க
விரும்பவில்லை ......
உன்னை
நினைப்பதற்காகவே
தனிமையை நான்
விரும்புகிறேன்





**P.VIJAYARAGHAVAN**
**II-MCA**

## மழை

உன் பிரிவின் வலி தாங்காமல்
அந்த வானமும் கண்ணீர்
சிந்துகிறது
மழையாக!!



**ARUN**
**II-MCA**

# 11 DRAWINGS







NITHYASREE.M
III-MCA

# DRAWINGS







**T.SURESH KUMAR**
**III-MCA**





**KUMAR.M**
**III-MCA**

## பூக்கள்



காலையில் மொட்டாக மலர்ந்து,

காதலின் எல்லைக்கே சென்று

அழகிய பெண்களின்  கூந்தலில் மணந்து

அதிசய பூவே, உன் வாழ்வை தொலைத்தாயே!!!.....


## கல்வி



வாழ்நாள் முழுதும் சிறப்பேன்

**நீ என்னோடு இருந்தால்!!!**
நீ இல்லையென்றால் வாழ்வே

இல்லையென மண்ணாவேன் பிணமாக !!



SARUKKAN
II-MCA

## நெஞ்சு பொறுக்குதில்லையே........

அது ஒரு அழகிய அந்திமாலை பொழுது, சூரியன் தன் சூரியக் கதிர்களை தன்னுடன் அடக்கிக்கொள்ளும் நேரத்தில், காதலனும் காதலியும் உரசிக்கொள்வது போன்று காற்றின் வேகத்தில் மரங்கள் ஒன்றோடுஒன்று உரசிக்கொள்கின்றன .

இவற்றை இரசித்தவாறே பூந்தோட்டத்தின் நடுவே மற்றோரு பூச்செடியான மனதில் ஏனோ, ஒரு சிறு சஞ்சலத்துடன் நிற்கிறாள் கதையின் நாயகி பானு .

சூரியனே தன் சூரியக்கதிர்களை சுருக்கிக்கொள்கிறான் என்றால், ,அப்பெண்ணின் அழகை என்னவென்று வர்ணிப்பது?

வாழ்க்கையில் ஒரு சிறுவட்டத்தில் சிறகடித்த அவளுக்கு ,தொலைவில்

சென்று கல்லூரி பயணத்தை தொடங்க ஏனோ? சஞ்சலம் .

பொருளாதாரத்திலும் ,கலாச்சாரத்திலும் ,பழக்கவழக்கத்திலும் முற்றிலும் மாறுபட்டவர்கள் படிக்கும் கல்லூரி என்பதால், "எப்படி இருக்கும் ?படிப்பு தேவைதானா ?",என பல கேள்விகளை தன்னுள் கேட்டுக்கொன்றிருக்கும் தருணத்தில் , "பானு ,பானு என்ன பன்ற? நேரமாச்சு ",என்ன அருகில் வருகிறாள் அவள் தாய் .கண்ணீரை துடைத்தவாரே தன் வீட்டிலுருந்து, பிரியா விடையுடன் செல்கிறாள் .......

நாட்கள் பல கழிக்கின்றன

**********************************************************************************

கல்லூரியில் பல ஆண்கள் தன் பின்னாடி சுற்றினாலும் யாரையும் இவள் கண்டுகொள்ளவில்லை .தன்னுடன் படிக்கும் சக மாணவர்களில் ஒருவன் இவள் மீது ஆசைப்படுகின்றான் ..அதையும் கண்டுகொள்ளவில்லை.

ஒருநாள் கல்லூரி வளாகத்தில் அவன் தன் நண்பர்களுடன் போதையில் இருக்கும்போது நண்பர்களில் ஒருவன் "என்ன மச்சான் !உன்னால கூட அந்த பிகரை உஷாரு பண்ணமுடில "!,என ஏளனமாய் பேச ,அவன் கோபத்துடன் தன் வகுப்பறைக்கு நுழைகின்றான் தன்னிலை மறந்த நிலையில் ....

பானு ,பானு ...இங்க வா,!என்று அழைக்க சற்று தயங்குகிறாள் ,ஒன்றுமில்லை, இந்த பாடத்துல ஒரு சிறு சந்தேகம் என கூறவே ,அவளும் அருகில் வருகிறாள் .

சொல்லிக்கொடுத்துக்கொண்டிருக்கும் தருணத்தில் ,வேன்றுமென்று பேனாவை தள்ளிவிடுகிறான் .

"எடுத்து தா பிளீஸ்! "என வினவ ,அவளும் பேனாவை எடுத்து கொடுக்கும்போது கையை பிடித்துக்கொண்டு விடவில்லை.உடனே கோபம் வரவே ,அவனை கன்னத்தில் அறைந்து விட்டு தன் இடத்துக்கு செல்கிறாள் .உடனே அங்குள்ள அனைவரும் சிரிக்கவே ,உடனே அவமானத்தில் அவனுக்கு கோபம் எல்லையில்லாமல் வருகிறது .அந்த கோபம் வெறியாக மாறவே மறுநாள் அவள் வரும்போது எதிரே சென்று ஆசிட்டை ஊற்றிவிட்டு ஓடிவிடுகின்றான் .

"கத்துகிறாள் ,புலம்புகிறாள் ",அழுது புலம்பினாலும் மருத்துவமனையில் வைத்து பார்க்கும் அளவிற்கு வசதியில்லை என்பதால், அவள் வாழ்க்கை நான்கு சுவற்றிற்கு நடுவே அல்லல்படும் நிலமையாகிவிட்டது .

அந்த முகத்தை பார்க்கும்போதுயெல்லாம் அவனை பழிவாங்க வேண்டுமென்ற எண்ணமே தோன்றியது அவளுக்கு .அந்த எண்ணம் அவளை நிம்மதியாக தூங்ககூடவில்லை .இரவு முழுதும் புரண்டுகொன்றிருக்கிறாள்..........

மறுநாள் கல்லூரிக்கு செல்கிறாள் ."என்ன கொடுமை?",அந்த மாணவன் மீது கல்லூரி நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை ,அவன் எப்பொழுதும்போல பெண்களை கேலிசெய்துகொன்றிருக்க ஆத்திரம் இவளுக்கு தலைக்கு ஏறுகிறது.கல்லூரி முடிந்த பின்னர் ,கல்லூரியின் அருகே உள்ள சாலையோரம் நின்றிருக்க ,அவனும் வருகிறான். இவள் இசுலாம் வர்க்கப்பெண் என்பதால் யாருக்கும் முகம் தெரியவில்லை .கை அசைகிறாள்,அவனும் வண்டியை நிறுத்துகிறான் ."சார் இந்த அட்ரஸ் எங்கே இருக்கு"? என கேட்கும் போதே தன் கையில் உள்ள கத்தியால் அவன் கழுத்தை பதம்பார்க்கிறாள் .அருகில் உள்ளவர்கள் அலறவே செய்வது அறியாமல் ஓடுகிறாள் ,எதிர்பாராத விதமாக லாரியில் அடிபட்டு தூக்கியெறியப்படுகிறாள் ,அப்போது அவள் துணி கிழுந்து முகம் தெரிகிறது .அவளின் கோர முகத்தால் குத்துயிராய்,குலைஉயிராய் இருக்கும்போதும் கூட காப்பாற்ற ஒருவர் கூட முன்வரவில்லை .அந்த தருணத்தில் அனைவரையும் சுற்றி பார்க்கிறாள் ஒரு வித ஏக்கத்துடன் .......

திடிரென்று அலறி அடித்துக்கொண்டு எழுகிறாள் .ஒரு நிமிடம் மூச்சு கூட விடவில்லை,பெருமூச்சுவிடுகிறாள் அப்பொழுது தான் தோன்றுகிறது அத்தனையும் கனவு ......இத்தனையும் நடந்திருந்தால் என்னவாகும் ?.. யோசிக்கிறாள் . தன் வாழ்க்கை தான் இருளாகிவிட்டது ,அவனாவது நல்லாயிருக்கட்டும் என படுக்கைக்கு செல்கிறாள் .

பழிக்குப்பழி எப்போதும் தீர்வாகாது ..

இதைபோல் எத்தைனையோ பெண்களின் வாழ்க்கை ஆண்களின் தவறான

போதைப்பழக்கத்தால் வீணாகிறது .....

கொஞ்சம் யோசித்து தான் பாருங்களேன் குடிமகன்களே !,......



**SONIYAPRIYANGA GANDHI K**
**III MCA**

## தன்னை சுமந்தவனும் - தான் சுமந்தவனும்

சுட்டெரிக்கும் வெயில் அந்த வெயிலின் உஷ்ணத்தை தாங்க முடியாமல் தன்னுடைய வீட்டுத்திண்ணையில் உட்காந்திருக்கும் முதியவர் , அந்த மதிய வேலையில் அனல் பறக்கும் தார் சாலையில் யாரையோ எதிர்பார்த்து காத்திருப்பது போல அந்த சாலையை உற்று பார்த்து கொண்டிருக்கிறார். திடிரென்று வாகனம் வரும் ஓசை கேட்கிறது. ஒரு சிறுவன் தன்னுடைய புத்தகப்பையை மாட்டிக்கொண்டு ஓடி வருகிறான்.சுருக்கம் விழுந்த முதியவர் முகத்தில் சிறிதளவு புன்னகை மலர்கிறது , அந்த சிறுவன் தாத்தா என்று சொல்லிக்கொண்டு முதியவரை கட்டி அணைக்கிறான் தன்னுடைய பேரனை பார்த்த உற்சாகத்தில் சிறுவனின் பிஞ்சு முகத்தில் தன்னுடைய முத்தத்தை பதிக்கிறார். அந்த சிறுவன் தன்னுடைய கையில் இருந்த பிஸ்கட் பாக்கெட்டை அந்த முதியவரிடம் கொடுத்துவிட்டு வீட்டிற்குள் தன்னுடைய தாயை பார்க்க ஓடுகிறான்.

பெரியவர் தன் அருகில் இருந்த நாய்க்கு அந்த பிஸ்கெட்டை ஒவ்வொன்றாக தூக்கிப்போட்டு அதை ரசித்துக் கொண்டிருக்கிறன். வீட்டிற்கு உள்ளே இருந்து வந்த ஒரு பெண் தன் கையில் இருந்த சாப்பாடு நிறைந்த தட்டை பெரியவரிடம் கொடுக்கிறாள். அவருடைய கையில் இருந்த பிஸ்கட் பாக்கெட்டை பாத்த அந்த பெண் "குழந்தை சாப்பிடுற பிஸ்கட் நாய்க்கு போட்டு இருக்க" என்று அந்த முதியவரை திட்டிக்கொண்டு உள்ளே சென்றுவிட்டாள். மனம் உடைந்த முதியவர் கண்ணில் சிறிதளவு கண்ணீருடன் தன் கையில் இருந்த சாப்பாட்டை சாப்பிடுகிறார். மறுபடியும் உள்ளே இருந்து அந்த பெண்ணின் குரல் கேட்கிறது.

"தண்டச்சோறு மாதிரி வீட்ல உக்காந்துட்டு

இருக்குது ஒரு வேலையும் செய்யறது இல்ல.

சிறிது நேரம் கழித்து முதியவரின் பேரன் அவருடைய அருகில் வந்து நிற்கிறான் . உள்ளே இருந்து வந்த நடுத்தர வயதுடைய இளைஜன் அந்த குழந்தையை தூக்கி தன்னுடைய பைக்கில் உட்கார வைத்துவிட்டு முதியவரிடம் சொல்கிறார். என்ன அப்பா ஏதாவது ஒரு வேலை செய்து கொடுக்காமல் சும்மாவே இருக்கியே இன்னு கரண்ட் பில் கட்டல, அதையாவது போய் கட்டிட்டு வரலாம்ல. அந்த பெண் வெளியே வந்து கரண்ட் பில் அட்டையும் பணமும் கொடுத்து "போங்க இந்த வேளையாவது செய்யுங்கள்" சொல்லிவிட்டு உள்ளே போய்ட்டாள். பாதி சாப்பிட்டு சாப்பிடாமலும் எழுந்து கையை கழுவி விட்டு அனல் பறக்கும் சாலையில் நடந்து செல்கிறார். ஒரு கட்டத்தில் வெயில் தாங்காமல் மயக்கம் வர நிலையில் கதையில் இருந்த அட்டையில் வைத்திருந்த பணம் கீழே விழுவது கூட தெரியாமல் தள்ளாடிய நிலையில் செல்கிறார்.

எப்படியோ ஒரு வழியாக கரண்ட் ஆபீஸ் ஐ அடைகிறார்.

கரண்ட் பில் அட்டையை கையில் பார்த்த பொது அதில் இருந்த பணத்தை காணவில்லை, தான் வந்த வழியெல்லாம் தேடி அலைந்து பணம் கிடைக்காத நிலையில் மனதில் பதற்றத்துடன் வீடு திரும்பினார். அந்த பெண்ணிடம் நடந்ததை சொல்கிறார். அந்த பெண் மிகவும் கோவம் அடைந்து அவருடைய கணவருக்கு தகவல் சொல்கிறார். அன்று இரவு முழுவதும் இருவரும் அந்த முதியோரை திட்டி தீர்த்துவிட்டு கடைசியில் ஒரு முடிவுக்கு வருகிறார்கள். முதியோர் இல்லம் சேர்த்துவிடலாம் என்று. அடுத்த நாள் முதியோர் இல்லத்தை அவரை சேர்த்து விடுகிறார்கள். அங்கு வேலை செய்யும் பெண் ஒருத்தி அவரை அழைத்து சென்று அவருக்காக ஒதுக்க பட்ட அறையில் அமர வைத்துவிட்டு,

"ஐயா எதாவது உதவி வேணும்னா கூப்பிடுங்கள்" என்று கூறி விட்டு சென்று விடுகிறாள். பக்கத்துக்கு படுக்கையில் தோல் சுருங்கி தலை நடுங்கி கொண்டு ஒரு முதியவர் அவரை பார்த்து உற்று நோக்கி

"வந்துட்டியா! நீ வருவேன்னு அப்பவே என்னக்கு தெரியும்" என்ற குரல்.....

திரும்பி பார்த்த அவரின் மனதில் ஒரு குரல்.....

-"தன்னை சுமந்தவனுக்கு செய்த தவறை இன்று தான் சுமந்தவன் செய்து விட்டான்" என்று....!

........................................................................................................................

## என் அம்மா



ஆழமான இருட்டு,

கண்ணை கூட திறக்காமல்

ஊஞ்சலாடிக்கொண்டிருந்தேன்,

யாரோ என்னை கொஞ்சுகிறார்கள் ,

ஒரு பெண்ணின் குரல் மட்டும் அடிக்கடி

என் காதுகளில் ஒலித்தது

தாலாட்டு பாடும் ஓசை

இதயத் துடிப்பாய் கேட்டது,

உல்லாசமாய் உலவிக்கொண்டிருந்த நேரம்

திரும்பி போக தோன்றுகிறது இந்நேரம்

என் அம்மாவின் கருவறைக்கு..............,



**BABU S**
**III-MCA**



Dr. A.R. Jayasudha/HOD
Facilitator



Mrs. M. Nirmala/AP
Editor



CHIEF-MAGAZINE DESIGNER
MR.GOPINATH.R
III-MCA



ASSISTANT-MAGAZINE DESIGNER
MR.NAMEER.P.H
III-MCA